அக்கரைப்பற்று பிரதேச சபை
அம்பாரை மாவட்டம்
----------------------------------------

1. நிதிக்கூற்றுகள்
-----------------------

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்
--------------------------------------------------

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 06 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 12 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
---------------------------------------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அக்கரைப்பற்று பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்
---------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்
---------------------------------------------

2015 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 715,713 பெறுமதியான தண்ணீர் பவுசர் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு
------------------------

2.1 நிதி விளைவுகள்
-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 1,603,549 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 3,930,177 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 2,326,628 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 வருமான நிர்வாகம்
----------------------------------

2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்
----------------------------------------------

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 368 வர்த்தக நிலையங்கள் மற்றும் 4,673 வீடுகள் மீது 2010 ஆம் ஆண்டு தொடக்கம் வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 2,520,500 தொகையான வருமானம் இழக்கப்படுகின்றது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான ஒரு உழவு இயந்திரமும், இழுவைப் பெட்டியும் மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரச் சட்டத்தின் அத்தியாயம் 203, பிரிவு 2(1) இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) நீர்க் குழாய் இணைப்பு தொடர்பாக ஒரு ஒப்பந்தக்காரருக்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 130,310 பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பாக பெறுகை வழிகாட்டிகள் - 2006 இன் பிரிவு 5.4.12 இன் பிரகாரம் சபையினால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் அலுவலகம், நூலகங்கள், பொதுச்சந்தை மற்றும் பொது விளையாட்டு மைதானம் என்பவை அமைந்துள்ள 502.4 பேர்ச் அளவுடைய 06 காணிகளுக்கான உரிமையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையிலுள்ள வாகனங்களுக்குரிய வருமான உத்தரவுப் பத்திரங்களை உரிய காலத்தில் பெறத்தவறியமையால் மீளாய்வாண்டில் தண்டப்பணமாக ரூபா 11,600 தொகை செலுத்தப்பட்டுள்ளது.

(உ) சபையின் JCB இயந்திரம் மீளாய்வாண்டில் விபத்துக்குள்ளாகி ரூபா 115,128 செலவில் திருத்தம் செய்யப்பட்ட போதிலும் இவ்விபத்து தொடர்பில் அரச நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் பொலிஸ் முறைப்பாடு மற்றும் விசாரணை நடாத்தி நட்டத்தின் அளவையும் அந்நட்டத்திற்கு பொறுப்பானவர்களையும் நிர்ணயிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பயன்படுத்தக்கூடிய நிலையில் 14 வாகனங்கள் காணப்படுகின்ற போதிலும், அவ்வாகனங்களுக்காக 04 சாரதிகளே நியமிக்கப்பட்டுள்ளமையால் அவ்வாகனங்களின் மூலம் சபையினால் உச்ச பயனை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

(எ) நீர்இணைப்பினை பெற்றுக்கொள்வது தொடர்பாக அக்கரைப்பற்று, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு மீளாய்வாண்டின் போது 11% பெறுமதிசேர் வரிக்குப் பதிலாக 15% பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டுள்ளதால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 34,749 தொகை மேலதிகமாகச் செலுத்தியுள்ளது.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

3.2.1 பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டம்

பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 2016 செப்தம்பர் 29 ஆந் திகதி 18 வேலைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டு ரூபா 3,850,000 தொகை நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், அவற்றில் வடிகால் திருத்தம் மற்றும் பொதுநூலக திருத்தத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 410,000 குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டிலிருந்து அக்கரைப்பற்று பிரதேச சபை மாநகர சபை மற்றும் பிரதேச சபை என இரண்டு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்படட போது உரிய அங்கீகாரமின்றி ரூபா 25,808,155 கூட்டு மொத்தமான சொத்துக்களும் ரூபா 2,398,775 கூட்டு மொத்தமான பொறுப்புக்களும் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டன.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் பிரதேச சபைகளை வலுவு+ட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளக வீதிகளை புனரமைப்பதற்காக சபையின் மோட்டார் கிரேடர் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அம்மோட்டார் கிரேடர் முலம் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கான கொடுப்பனவாகிய ரூபா 42,000 தொகையையும் குறித்த வேலை ஒப்பந்தம் வழங்கப்பட்ட சனசமூக நிலையத்திற்கே செலுத்தியிருந்தது.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல் |
| | ii. சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம் | திண்மக் கழிவுகளை தரப்படுத்தி சேகரித்தல் |